DEPOSITION OF THE WITNESS

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண். CC.12/2019

**prosecution witness: PW-1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பிரியா | தொழில் | : | கூலிவேலை |
| த/பெ. | : | வேலு | வயது | : | 36 |
| கிராமம் | : | சேராங்கோட்டை | சமயம் | : | இந்து |
| தாலுகா | : | இராமேஸ்வரம் | | | |

(Solemnly Affimed in Accordance with provision of oath's act 1969)

<u>28.07.2025</u>

( எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்,)

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

1. சம்பவ காலகட்டத்தில் சம்பவ நாளன்றே நான் புகார் அளித்தேன் என்றால் சரிதான். இந்த புகாரினை எந்த போலீசார் எழுதிக்கொடுத்தார் என்றால் தனுஷ்கோடி காவல் நிலையத்தில் உள்ள போலீசார் எழுதிக்கொடுத்தார். சம்பவ காலகட்டத்தில் எதிரியின் பெயரை புகார் கொடுக்கும்போது குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இரமேஸ்வரம் சேரன்கோட்டை பகுதியில் இருந்து மருதுபாண்டியர் நகர் முத்துராமலிங்க தேவர் நகர், வழியாகத்தான் சுனாமி குடியிருப்பு பகுதிக்கு செல்ல முடியும் என்றால் சரிதான். சம்பவ காலகட்டத்தில் 5 முதல் 6 நபர்கள் இருந்தார்களா என்றால் 2 நபர்கள் இருந்தார்கள். என்னிடம் பிரச்சனை செய்தது ஒரு நபர். எனக்கு நன்கு எழுத படிக்க தெரியாது என்றால் சரிதான்.

2. நான் புகார் கொடுக்க செல்லும்போது போலீசார் நடவடிக்கை எடுக்கவில்லை. நடவடிக்கை எடுக்க வலியுறித்தி கிராமத்தின் தலைவர், கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களை அழைத்துக்கொண்டு தான் வழக்கு பதிவு செய்ய சென்றோம் என்றால் சரிதான். நான் புகார் அளித்த அன்றை தினமே முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார்கள். இந்த வழக்கின் எதிரிகளை 2 நாட்கள் கழித்து தான் பிடித்து வந்தார்கள். நான் அப்போது இருந்தேன என்றால்

SUJITH Digitally signed by SUJITH Date: 2025.07.28 17:46:16 +0530

இல்லை கூறினார்கள். என்னிடம் புகார்மனுவில் உள்ள புகார்மனுவில் உள்ள கையெழுத்திற்கும் முதல் தகவல் அறிக்கை காலம் 14 உள்ள கையெழுத்திற்கு மாறுபாடாக உள்ளது என்றால் சரிதான்.

3. நான் குடியிருந்து வரும் இராமேஸ்வரம் தெற்குகரையூர், சேராங்கோட்டை, மருதுபாண்டியர் நகர், மீனவர் காலனி வடக்கு ஆகிய பகுதியில் ஏதாவது குற்ற சம்பவங்கள் நடைபெற்றால் இராமேஸ்வரம் துறைமுகம் காவல் நிலையத்தில் புகார் அளிக்க வேண்டும் என்றால் சரிதான். ஆஜர் எதிரி எந்த ஊரை சேர்ந்தவர் என்றால் கரையூரைச்சேர்ந்தவர் அவருடைய அப்பா பெயர் எனக்குத் தெரியாது. ஆஜர் எதிரிக்கு திருமணம் ஆகிவிட்டதா ஆகவில்லையா என்ற விவரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. என்னை போலீசார் விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்களா என்றால் வாங்கினார்கள். சம்பவ தினத்தன்று மாலை 5 மணிக்கு காவல் நிலைத்தில் வைத்து வாங்கினார்கள். அப்போது என்னை விசாரிக்கும் போது எனது தாயார், எனது கணவர் மட்டும் இருந்தார்கள் என்றால் சரிதான்.

4. சம்பவ காலகட்டத்தில் எனக்கு காயங்கள் ஏதும் ஏற்படவில்லை என்றால் சரிதான். காவல் நிலையத்தில் வைத்து எத்தனை கையெழுத்து போட்டீர்கள் என்றால் 2 முதல் 3 கையெழுத்து வாங்கினார்கள். நான் கையெழுத்து போட்டதில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் தெரியாது என்றால் சம்பவம் என்ன நடந்தது என்ற விவரத்தை எழுதியிருந்தார்கள். இந்த புகாரில் யாரிடம் கொடுத்தாக எழுதியிருந்தது என்றால் ஆய்வாளரிடம் தான் கொடுத்தேன். பெறுநர் என்ற முகவரியில் ஆய்வாளர் என்று தான் இருந்தது. சம்பவம் நடந்தது மதியம் 3 மணி ஆகும் . சம்பவ காலகட்டத்தில் மதியம் 3 மணிக்கு பிறகு நான் எனது வீட்டிற்கு சென்றுவிட்டேன். இரவு முழுவதும் எனது வீட்டிலே இருந்து விட்டேன் என்றால் சரிதான். எனது வீட்டிற்கு செல்ல வேண்டும் என்றால் தனுஷ்கோடி காவல் நிலைத்தை தாண்டி தான் செல்ல முடியும் என்றால் சரிதான்.

SUJITH Digitally signed by SUJITH Date: 2025.07.28 17:46:21 +0530

5. சம்பவ தினத்தன்று புகார்கொடுக்கப்பட்டுவிட்டது மறுநாள் புகார் கொடுத்தோம் என்று சொன்னால் அது தவறு என்றால் சரிதான். ஆஜர் எதிரி என்ன வேலைக்க செல்லக்கூடியவர் என்றால் தெரியாது. சம்பவ நேரத்தில் சம்பவ இடத்தில் ஆஜர் எதிரி இல்லை என்றால் சரியல்ல. போலீசாரால் எதிரியை பழிவாங்க வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது தாயார் ராக்குவின் குடும்பத்தாருக்கும் எதிரியின் குடும்பத்தாருக்கும் பிரச்சனை இருந்து வந்தது என்றால் சரியல்ல. சம்பவ நேரத்தில் சம்பவ இடத்தில் என்னையும் சேர்த்து மொத்தம் 3 நபர்கள் தான் இருந்தோம் என்றால் சரிதான்.

SUJITH
Digitally signed by SUJITH
Date: 2025.07.28 17:46:26 +0530